தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 20/ந/2024

நாள். 13.11.2024

திருமதி. ப.சந்திரா,
போடிநாயக்கனூர்,தேனி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
போடிநாயக்கனூர், தேனி மாவட்டம் – எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர், முனிசிபல் காலனி தெரு எண்.6, கதவு எண்.13W/165 என்கிற முகவரியைச் சேர்ந்த திருமதி.ப.சந்திரா என்பவரின் 09.07.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில 11.07.2024 அன்று பெறப்பட்டு, 20/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேனிமாவட்டம், போடிநாயக்கனூர், முனிசிபல் காலனி தெரு எண்.6, கதவு எண்.13W/165 என்கிற முகவரியைச் சேர்ந்த திருமதி.ப.சந்திரா என்பவர் தமது 20.03.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“எனது கணவர் திரு.பரமசிவம் த/பெ. சுப்பன் போடிநாயக்கனூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 29.01.2023 அன்று பணியிடைக்காலமானார். அன்னாரின் மனைவியும் வாரிசுதாரருமாகிய எனக்கு காலஞ்சென்ற பணியாளரின் இறுதிச்சடங்கிற்காக அரசு வழங்கும் ரூ.25,000/– மட்டும் வழங்கப்பட்டது. எனக்கு கிடைக்க வேண்டிய பிற பணப்பலன்களை வழங்கிட வேண்டி இறப்பு சான்றிதழ், 28.03.2023 அன்று நகராட்சி ஆணையாளரிடம் விண்ணப்பித்திருந்தேன். இறப்புக்கான காரணச்சான்றிதழ், மற்றும் வாரிசுச்சான்று, பிற வாரிசுகளின் ஆட்சேபனையில்லாச்சான்று ஆகியவைகளை நகராட்சி ஆணையாளருக்கு

சமாப்பிக்குமாறு கோரப்பட்டது. அதன்படி அனைத்து சான்றிதழ்களும் நகராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிலையில் எனது கணவர் இறந்து 10 மாதங்கள் கழித்து ஆணையாளர் அவர்கள் தனது கடிதத்தில் வேறு இருநபர்கள் தாங்கள்தான் உண்மையான வாரிசு என மனுக்கொடுத்துள்ளதாக குறிப்பிட்டு எனக்கு பணப்பலன்களை வழங்க இயலாது என தெரிவித்தார்.எனது கணவர் இறந்து ஒன்றரை வருடத்திற்கும் மேலாகிவிட்டது. பணப்பலன்களைப் பெறுவதற்காக நகராட்சி நிர்வாகத்தால் கோரப்பட்ட அனைத்து சான்றிதழ்களையும் சமர்ப்பித்து விட்டேன். கணவரின் மாத ஊதியத்தை மட்டும் நம்பி வாழ்க்கை நடத்திவந்த நான் கடந்த ஒன்றரை வருடமாக மிகுந்த பணக்கஷ்டத்தில் உள்ளேன். எனவே இது குறித்து முறைமன்ற நடுவம் தீர விசாரித்து எனக்கு உரிய நியாயம் கிடைக்கவும், விரைவில் பணப்பலன்கள் கிடைத்திட உதவிடுமாறு வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன். மேலும் காலஞ்சென்ற கடைநிலை ஊழியரின் குடும்பத்திற்கு சேர வேண்டிய பணப்பலன்களை பெறுவதற்கு நகராட்சி நிர்வாகம் கேட்ட அனைத்து ஆவணங்களை சமர்பித்த பின்பும் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக காலதாமதப்படுத்தி வரும் பிரிவு எழுத்தர் திரு.ஆனந்தன், மேலாளர் திரு.முனிராஜ் மற்றும் ஆணைாளர் திருமதி.ராஜலட்சுமி ஆகியோர்மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கவும் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 16.07.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

3. போடி நகராட்சி ஆணையாளர் தனது 05.08.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்.

"போடிநாயக்கனூர் நகராட்சியில் தூய்மைப்பணியாளராக பணியாற்றி கடந்த 29.01.2023–ல் பணியிடை காலமான திரு.பரமசிவம் த/பெ.சுப்பன் என்பவரின் மனைவி எனக்குறிப்பிட்டு திருமதி.ப.சந்திரா என்பவர் தனது விண்ணப்பத்தில் இறந்த பணியாளருக்கு வழங்க வேண்டிய ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பிற்கான பணப்பலன்களை தனக்கு வழங்கும்படி விண்ணணப்பம் செய்தார். விண்ணப்பத்தின் மீது பரிசீலனை செய்து மேற்படி தொகை வழங்க இறந்த பணியாளரின் இறப்புச்சான்று, வாரிசு சான்று மற்றும் இதர ஆவணங்களை பெற்று விண்ணப்பிக்க அறிவிப்பு செய்யப்பட்டது. திருமதி.சந்திரா என்பவர் இறப்பு சான்று, வாரிசு சான்று மன்றும் ஆட்சேபனை இல்லா சான்று பெற்று மீண்டும் பணப்பலன் கோரி விண்ணப்பித்தார். இந்நிலையில் மேலும் இருநபர்கள் திருமதி.ப.உமாமகேஸ்வரி மற்றும் திரு.ப.குருமூர்த்தி ஆகிய இருவரும் இணைந்து இறந்த பணியாளரான திரு.பரமசிவம் த/பெ.சுப்பன் என்பவர் எங்களது தகப்பனார் என்றும் நாங்கள் தான் திரு.பரமசிவம் மற்றும் திருமதி.பச்சையம்மாள் என்பவருக்கு பிறந்த குழந்தைகள் மற்றும் வாரிசுகள் ஆவோம் என தெரிவித்து அதற்கு ஆதாரமாக திரு.குருமூர்த்தி என்பவரின் பிறப்புச்சான்று, பள்ளிச்சான்று மற்றும் சாதிச்சான்று ஆகியவற்றினை இணைத்து விண்ணபித்து மேற்படி தொகையினை வழங்க ஆட்சேபனை செய்திருந்தனர். ஆட்சேபனையின் அடிப்படையில் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் இறந்த பணியாளரான திரு.பரமசிவம் த/பெ.சுப்பன் என்பவர் உயிருடன் பணியில் இருக்கும் பொழுது பணியாளர்

குழுக்காப்பீட்டு திட்டத்திற்கு வழங்கிய வாரிசு படிவத்தில (Form VII) திருமதி.பச்சையம்மாள் என்பவரை மனைவி என பதிவு செய்து ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் 11.10.2023ம் நாளிட்ட அறிவிப்பில், இறந்த பணியாளரின் வாரிசு தொடர்பான பிரச்சனை உள்ளதால் இருவருக்கும் தங்களது கோரிக்கையினை பரிசீலிக்க இயலாது என தெரிவித்து அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பு பெற்றுக்கொண்டு திருமதி.ப.சந்திரா என்பவர் தொடர்ந்து நினைவூட்டு விண்ணப்பங்கள் வழங்கி வந்தார். இந்நிலையில் மேற்படி விண்ணப்பத்தின் மீது மேல்நடவடிக்கை தொடர நகராட்சி வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரு கோரியதில் நகராட்சி வழக்கறிஞர் தனது சட்டக்கருத்துருவில் இறந்த பணியாளரான திரு.பரமசிவம் த/பெ.சுப்பன் என்பவருக்கு சட்டப்படியான வாரிசு யார் என்பதனை உறுதி செய்ய உயர் நீதிமன்றத்தில் தக்க ஆணை பெற்று சமர்ப்பிக்க அறிவுறுத்தி அறிவிப்பு வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

மேலும் திருமதி.ப.சந்திரா எனபவருக்கு எந்த ஆவணங்கள் அடிப்படையில் வாரிசு சான்று வழங்கப்பட்டது என தெரிவிக்க கோரி வட்டாட்சியர், போடிநாயக்கனூருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. உரிய பதில் பெற்றவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு உண்மையான வாரிசுதாரருக்கு உரிய பணப்பலன்கள் பெறுவற்கு வழிவகை செய்யப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையர் 18.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு 30.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் திருமதி.ப.சந்திரா 18.09.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

எனது கணவர் பரமசிவம் த/பெ. சுப்பன் என்பவர் போடிநாயக்கனூர் நகராட்சியில் நிரந்தர துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்த நிலையில் 29.01.2023 ஆம் தேதி அன்று பணியிடையே காலமானார். அன்னாருக்கு வழங்க வேண்டிய ஈட்டிய விடுப்பு, ஈட்டா விடுப்புக்கான ஊதியத்தை அவர் இயற்கை எய்திய காரணத்தினால் அன்னாரின் வாரிசுதாரரும் மனைவியுமான எனக்கு அத்தொகையினை வழங்க ஆவண செய்து தரும்படி இம்முறைமன்ற நடுவத்தைக்கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நகராட்சியால் கோரப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும் எனக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய எனது கணவரின் ஒய்வூதியப்பணப்பலன்கள் கிடைக்கவில்லை. காலதாமதம் ஏற்படுத்தும் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறும் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.

எனது கணவர் திரு.பரமசிவம் அவர்கள் காலமான தேதியிலிருந்து எனக்கு கிடைக்கப்பட வேண்டிய ஓய்வூதியப் பணப்பலன்களை பெற்றுத்தரும்படி இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன் என சமர்ப்பித்துள்ளார்.

5) நகராட்சி ஆணையாளர் தனது 18.09.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தன்னை இறந்து போன இந்நகராட்சி துப்புரவு பணியாளர் திரு.பரமசிவம் அவர்களின் மனைவி என கூறிக்கொள்ளும் திருமதி.ப.சந்திரா என்பவர் தனது கணவரின் ஈட்டிய விடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு பணப்பலன்களை தருமாறு இந்நகராட்சியைக்கோரி கடிதம் அனுப்பினார். நகராட்சியிலிருந்து மேற்படி கோரிக்கையை பரிசீலிப்பதற்கு உரிய இறப்பு சான்றிதழ், மற்றும் வாரிசு சான்றிதழ்களை நகராட்சி கோரியது. இந்நிலையில் திரு.குருமூர்த்தி மற்றும் திருமதி.உமாமகேஸ்வரி என்ற இருவர் திருமதி சந்திராவின் கோரிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்து தாங்கள் தான் உண்மையான வாரிசுகள் என கூறி பிறப்பு சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழ் இவற்றை இந்நகராட்சியில் சமர்ப்பித்துள்ளார்கள்.

இந்நிலையில் காலமான திரு.பரமசிவம், துப்புரவு பணியாளர் அவர்களின் பணிப்பதிவேட்டினை பரிசீலனை செய்தபோது அவர் திருமதி.பச்சையம்மாள் என்பவரை தனது வாரிசாக Group Insurance Scheme படிவம்–7ல் தெரிவித்துள்ளார். இந்த விவரம் மனுதாரர் திருமதி சந்திராவிற்கு தெரிவிக்கப்பட்டு, நகராட்சி நிலையான விதிகளின்படி அவரை தான் தன் வாரிசு என்று நீதிமன்ற உத்தரவினை பெற்று வரும்படி அவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.மேலும் இந்நேர்வின் உண்மைத்தன்மையினை ஆராய்ந்து அறிக்கை அனுப்பும்படி வட்டாட்சியர் அவர்கள் கோரப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் வாரிசுதாரர் தொடர்பான நீதிமன்ற உத்தரவினை பெற்று வரும் நிலையில் இந்நேர்வில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் என சமர்ப்பித்துள்ளார்.

6) மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரின் வாக்குமூலம், அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் திருமதி.ப.சந்திரா தனது கணவர் திரு.பரமசிவம் காலமான தேதியிலிருந்து தனக்கு கிடைக்கப்பட வேண்டிய ஓய்வூதியப் பணப்பலன்களை கோரி நகராட்சி ஆணையரிடம் விண்ணப்பித்திருந்ததாகவும், இதுவரை ஓய்வூதிய பயன்கள் கிடைக்காததால் அதனை பெற்றுத்தரும்படியும், பணப்பலன்களை பெற்றுத்தருவதில் காலதாமதம் ஏற்படுத்திய ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

இந்நேர்வில் நகராட்சி ஆணையாளர் தனது அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் திரு.பரமசிவம், போடிநாயக்கனூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியிலிருக்கும் பொழுது 29.01.2023 அன்று மரணம் அடைந்துள்ளார் எனவும், திரு.குருமூர்த்தி மற்றும் திருமதி.உமாமகேஸ்வரி என்ற இருவர் திருமதி சந்திராவின் கோரிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்து தாங்கள் திரு.பரமசிவம் மற்றும் திருமதி.பச்சையம்மாள் என்பவருக்கு பிறந்த குழந்தைகள் என்றும் தாங்கள் தான் உண்மையான வாரிசுகள் என கூறி பிறப்பு சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழ் போடிநாயக்கனூர் நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதாகவும், திரு.பரமசிவம் என்பவரின் பணிப்பதிவேட்டினை பரிசீலனை செய்ததில் அவர் திருமதி.பச்சையம்மாள் என்பவரை தனது வாரிசாக Group Insurance Scheme படிவம்–7ல் தெரிவித்துள்ளதாகவும்மேலும் இந்நேர்வில் வாரிசு சான்றின் உண்மைத்தன்மையினை ஆராய்ந்து அறிக்கை அனுப்பும்படி வட்டாட்சியர் அவர்களை கோரி இருப்பதாகவும்வாரிசுதாரர் தொடர்பான நீதிமன்ற உத்தரவினை மனுதாரர் பெற்று வரும் நிலையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், காலஞ்சென்ற திரு.பரமசிவத்தின் உண்மையான வாரிசு யார் என்பதை வட்டாட்சியர் அறிக்கை மற்றும் மாண்பமை நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் முடிவு செய்து உரிய வாரிசுதாரர்களுக்கு இறப்புகால பணப்பலன்கள், ஓய்வூதியம் ஆகியவை விரைந்து கிடைத்திட உரிய நடவடிக்கையினை 30 நாட்களுக்குள் மேற்கொண்டு, எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 13–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திருமதி. ப.சந்திரா,
க/பெ. (லேட்) பரமசிவம்,
13W/165 முனிசிபல் காலனி தெரு எண்.6,
போடிநாயக்கனூர் – 625 513.
தேனி மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
போடிநாயக்கனூர் நகராட்சி,
போடிநாயக்கனூர்– 625 513.
தேனி மாவட்டம்.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)